**நவம்பர் – 22**

# TNPSC துளிகள்

- 18 வயதான M. காசிமா அமெரிக்காவில் நடைபெற்ற 6வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றதன் மூலம் இளம் கேரம் உலக சாம்பியன் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- தமிழ்நாட்டில் உள்ள பெகாட்ரானின் ஐபோன் உற்பத்தி ஆலையின் 60% பங்குகளை வாங்குவதற்கு டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.
- தெலுங்கானாவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் M. கருணாகர் ரெட்டி முதல் ஜாதவ் பாயேங் சர்வதேச விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- குறை கடத்தி உற்பத்தியின் மீதான தன்னிறைவில் குஜராத் மாநிலத்தின் முன்னணி நிலையை உறுதி செய்வதற்காக என்று குஜராத் மாநில அரசானது இந்தியாவின் முதல் ‘குஜராத் குறைகடத்தி உற்பத்தி கொள்கை 2022-2027 என்ற கொள்கையினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 2007 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் பயணத்திற்குப் பிறகான 17 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவிற்கு இந்தியப் பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார்.
- இந்திய மின் கட்டமைப்பு மூலமாக நேபாளத்திலிருந்து வங்காளதேசத்திற்கு மின் பகிர்மானத்தினை மேற்கொள்வதற்காக என்று முதலாவது முத்தரப்பு மின் பரிமாற்ற ஒப்பந்தத்தில் 3 நாடுகளும் இணைந்துள்ளது.
- நைஜீரிய அழகியினைத் தோற்கடித்து, டென்மார்க் நாட்டினைச் சேர்ந்த விக்டோரியா கிஜார் தெயில்விக் 73வது பிரபஞ்ச அழகி என்ற பட்டத்தினை வென்றுள்ள நிலையில் டென்மார்க் நாட்டில் இருந்து இந்தப் பட்டத்தினை வென்ற முதல் நபர் இவராவார்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், தனது ஊடகச் சொத்துக்களை உலகளாவிய ஊடக நிறுவனமான வால்ட் டிஸ்னியின் இந்திய வணிகத்துடன் இணைக்கும் புதிய கூட்டு முயற்சியை உருவாக்கியுள்ளது.
- ஒரு கடுமையான வறட்சியானது உலகின் மிகப்பெரிய செயற்கை ஏரியான கரிபா ஏரியின் நீர் மட்டத்தினை மிகவும் குறைவான நிலைக்குக் குறையச் செய்துள்ள ஒரு நிலையில் இது ஜாம்பியா மற்றும் ஜிம்பாப்வே நாடுகளின் மின்சாரத் தேவைகளின் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்யும் அணையை மூடும் நிலைக்குத் தள்ளும் என்ற ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.
- குழந்தைப் பருவ பாலியல் சுரண்டல்கள், அத்துமீறல்கள் மற்றும் வன்முறையைத் தடுப்பது மற்றும் அதைக் குணப்படுத்துவதற்கான உலக தினமானது ஆண்டுதோறும் நவம்பர் 18 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## 16வது நிதி ஆணையத்தின் அலுவல் பூர்வ வருகை

- ஆணையத் தலைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையக் குழு தமிழகத்திற்கு வருகை தந்தது.
- அக்குழுவின் ஆலோசனைகளின் ஒரு பகுதியாக நெம்மேலி உப்புநீக்க ஆலையையும் அவர்கள் ஆய்வு செய்தனர்.
- அப்போது மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கினை 50% ஆக உயர்த்த வேண்டும்

என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

- மேலும் அது குறைக்கப்பட்ட நிதிப் பகிர்வு மற்றும் மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் திட்டங்களால் பெருகி வரும் நிதிச் சுமைகள் பற்றிய சிக்கல்களையும் நன்கு குறிப்பிட்டுக் காட்டியது.
- தமிழ்நாடு போன்ற வளர்ந்து வரும் மாநிலங்களை மிகவும் நன்கு ஆதரிக்கும் திருத்தப் பட்ட நிதிக் கட்டமைப்பின் அவசியத்தை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.
- கடந்த நான்கு ஆண்டுகளில், 15வது நிதிக் குழுவினால் வெகுவாக பரிந்துரைக்கப்பட்ட மாநிலங்களுக்கான 41% வருவாய்ப் பகிர்விற்கும், 33.16% உண்மையான வருவாய்ப் பகிர்வுக்கும் இடையில் உள்ள இடைவெளி குறித்து அரசு கவலை தெரிவித்துள்ளது.




## 16வது நிதி ஆணையக்குழு எதிர் கொள்ள உள்ள முக்கிய சவால்கள்

- இயற்கைப் பேரிடர்களின் தாக்கம், முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பு, விரைவான நகரமயமாதலால் ஏற்படும் தேவைகள் ஆகிய மூன்று முக்கிய முதன்மை சவால்களை தமிழ்நாடு மாநிலம் எதிர் கொண்டு வருகிறது.
- நிதி ரீதியாக இந்தச் சவால்களை மாநில அரசு சமாளிக்க உதவும் சில பரிந்துரைகளை வழங்குமாறு 16வது நிதி ஆணையத்திடம் அரசு கோரியுள்ளது.
- தமிழ்நாட்டின் மக்கள்தொகையின் சராசரி வயது ஆனது, தற்போது சுமார் 36.4 ஆக

உள்ளதோடு. இது உத்தரப் பிரதேசத்துடன் ஒப்பிடும்போது 9.5 ஆண்டுகள் அதிகமாகும்.

- 16வது நிதி ஆணையத்தின் பதவிக் காலம் முடிவடையும் போது, தமிழ்நாட்டின் மக்கள் தொகையின் சராசரி வயது 38.5 ஆக இருக்கும்.
- அதற்குள் நாட்டிலேயே மிகவும் அதிக முதியோர்களைக் கொண்ட ஒரு மாநிலமாக தமிழகம் உருவாகும்.




## ஐந்திணை திட்டம்




- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, பழங்குடியின வேளாண்

பொருட்களுக்கான மதிப்புக் கூட்டல் அலகுகளை அமைப்பதற்காக வேண்டி பல்வேறு நடவடிக்கைகளை இறுதி செய்து வருகிறது.

- ஐந்திணைத் திட்டம் என்றும் அழைக்கப்படும் இது தொல்குடியினர் வேளாண்மை மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இது பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகங்களின் சமூக-பொருளாதார நலன் மேம்பாட்டிற்கான நில அடிப்படையிலான தொகுப்பு சார் அணுகுமுறையாகும்.
- இத்திட்டத்தின் கீழ், இந்த மாவட்டங்களில் உள்ள பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் சமூகங்களிலிருந்து தலா 200 முதல் 300 உறுப்பினர்களைக் கொண்ட 14 சங்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.
- அதன் உறுப்பினர்களுக்கு மதிப்புக் கூட்டல் மற்றும் அவர்களின் தயாரிப்புகளை நன்கு சந்தைப் படுத்துதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதல் நீண்ட தூர வரம்புடைய மீயொலி எறிகணை

- இந்திய நாடானது பல்வேறு ஆயுதங்களை 1,500 கிலோ மீட்டருக்கு மேலான தொலைவு வரை சுமந்து செல்லும் திறன் கொண்ட தனது முதல் நீண்ட தூர வரம்புடைய மீயொலி எறிகணையை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- இந்த எறிகணையானது மாக் 6 (ஒலியின் வேகத்தை விட ஆறு மடங்கு) என்ற வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது.
- இந்த வகையானது, "கேரியர் கில்லர்" என்ற புனைப் பெயர் கொண்ட சீனாவின் DF-21D எறிகணைக்குச் சமமான ஆயுத அமைப்பினைக் கொண்ட நாடாக இந்திய நாட்டின் நிலையினை உயர்த்தும்.




## சாகர் மாந்தன் நடவடிக்கை

- இந்தியாவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் ஆனது (NCB) சாகர் மாந்தன் நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- "போதைப் பொருட்களின் இறைவன்" என்றும் அழைக்கப்படுகின்ற, தேடப்பட்டு வரும் போதைப் பொருள் கடத்தல்காரனான ஹாஜி சலீமின் மாபெரும் போதைப்பொருள்

கடத்தல் சாம்ராஜ்யத்தைச் சிதைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அவர்களின் சட்ட விரோதப் போதைப் பொருட்கள் ஆனது ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு நாடுகளில் பரவியிருக்கும் சிக்கலான வலையமைப்பைக் கொண்டு உள்ளன.

## அகில இந்தியப் பணிகள் (நடத்தை) விதிகள், 1968




- அரசு பணி விதிகளை மீறியதாகக் கூறி இரண்டு இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை கேரள அரசு பணி இடைநீக்கம் செய்துள்ளது.
- அகில இந்தியப் பணிகள் (நடத்தை) விதிகள், 1968 (AIS விதிகள்) இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் இந்திய வனப் பணி அதிகாரிகளின் நடத்தையை நிர்வகிக்கிறது.
- AIS விதிகள் ஆனது குடிமைப்பணி அதிகாரிகளுக்கான நடத்தை விதிகளை வழங்கச் செய்கின்றன.
- AIS விதிகளின் படி, அவர்கள் அரசியலமைப்பு விழுமியங்களின் மேலாதிக்கத்தை கட்டி காக்க (நிலை நிறுத்த) வேண்டும்.

- அவர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவதில் பொது ஊடகங்களில் பங்கேற்கலாம் அல்லது பங்களிக்கலாம்.
- அவர்கள் எந்தவொருப் பொதுத் தள ஊடகத்திலும் அரசாங்கத்தின் கொள்கைகளை மோசமாக விமர்சிக்கக் கூடாது.
- அரசாங்கத்தின் முன் அனுமதியின்றி, விமர்சனத்திற்கு உட்பட்ட அதிகாரப்பூர்வச் செயலை நிரூபிப்பதற்காக அவர்கள் எந்த ஒரு நீதிமன்றத்தையும் அல்லது எந்தவொரு பத்திரிகையையும் நாடக்கூடாது.

# சர்வதேசச் செய்திகள்

## மவோரி குழு - ஹாகா நடனம்



- நியூசிலாந்தின் இளம் பாராளுமன்ற உறுப்பினர், ஹனா-ரவ்ஹிதி மைபி-கிளார்க், சர்ச்சைக்குரிய ஒப்பந்தக் கோட்பாடுகள் மசோதாவிற்கு எதிராக குரல் கொடுத்து உள்ளார்.
- அவர் அவை அமர்வின் போது அவர்களின் பாரம்பரிய மவோரி ஹக்கா என்ற ஒரு நடனத்தினையும் நிகழ்த்தினார்.
- மவோரி ஹக்கா என்பது நியூசிலாந்தின் உள்ளார்ந்த கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்ட ஒரு பாரம்பரிய நிகழ்ச்சியாகும்.
- இது அதன் மிக சக்திவாய்ந்த ஆற்றல் தேவைப்படுதல், கடுமையான முகபாவனைகள் (புகானா) மற்றும் முத்திரை, கை சைகைகள் மற்றும் மந்திர உபசரிப்பு போன்ற உடல் அசைவுகளுக்கு பெயர் பெற்றது.
- ஹக்கா என்பது ஒரு பழங்குடியினரின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகள் குறித்த பல கதைகளுடன் ஒவ்வொரு பிராந்தியத்தின் அடிப்படையில் மாறுபடும்.
- ஒவ்வொன்றும் அதன் பெரும் தனித்துவமான நோக்கத்துடன் கூடிய பல்வேறு ஹக்கா வடிவங்கள் உள்ளன:
  - பெருபெரு: வலிமையை வெளிக்காட்டுவதற்காக வேண்டி போர் ஆயுதங்களைக் கொண்டு நிகழ்த்தப் படும் போர் முறை ஹக்கா.
  - கராஹூ: போர் வீரர்களின் தயார்நிலையைச் சோதிக்கும் ஒரு பகுதியளவு போர்

சார்ந்த நடனம்.

- ஹகா துய் வேவே: மகிழ்ச்சி அல்லது கோபம் போன்ற உணர்ச்சிகளை வெளிப் படுத்தும் போரற்ற ஹக்கா.
- கா மேட்டெ: தலைவர் எதிரியின் பிடியிலிருந்து தப்பித்த ஓர் கதையையும், பின்னர் அவர் ஒரு பெரிய மவோரி தலைவராக உருவெடுத்ததையும் கூறுதல்.

## APEC உச்சி மாநாடு 2024





- 2024 ஆம் ஆண்டு ஆசியப் பசிபிக் பொருளாதார உச்சி மாநாடு ஆனது பெருவில் உள்ள லிமா எனுமிடத்தில் நடைபெற்றது.
- ஆசியப் பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) 1989 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- இது மிகவும் நிலையான மேம்பாட்டிற்கான தடையற்ற வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- சுங்கங்களை மேம்படுத்தி ஒழுங்குமுறைகளைச் சீரமைப்பதன் மூலம் சரக்குகள், சேவைகள், முதலீடுகள் மற்றும் மக்களின் பன்னாட்டு இயக்கத்தினை APEC அமைப்பு ஒழுங்குபடுத்துகிறது.
- APEC ஆனது அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் பிற நாடுகள் உட்பட 21 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது என்பதோடு இது உலக மக்கள் தொகையில் சுமார் 40% பங்கினையும், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 60% பங்கினையும் கொண்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## விண்வெளியில் நான்கு வரிக்குதிரை மீன்

- சீன அறிவியலாளர்கள், சீன விண்வெளி நிலையத்தில் மூடியிடப்பட்டப் பெட்டகத்தின் உள்ளே ஒரு நீர்வாழ் சூழலை வெற்றிகரமாகப் பேணியுள்ளனர்.
- ஷென்சுவோ-18 ஆய்வுப் பயணத்தின் ஒரு பகுதியான இந்தப் பரிசோதனையானது விண்வெளி சூழலியல் சோதனைகளில் புதிய சாதனையைப் படைத்துள்ளது.

- விண்வெளியின் சவாலான ஒரு சூழலில் நீர்வாழ் உயிரினங்கள் எவ்வாறு உயிர் வாழ முடியும் என்பதைப் புரிந்து கொள்வதில் இந்தச் சாதனை ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லைக் குறிக்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## 'An Eye On Methane – Invisible But Not Unseen' அறிக்கை




- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் (UNEP) சர்வதேச மீத்தேன் உமிழ்வு ஆய்வகத்தினால் (IMEO) வெளியிடப்பட்டது.
- அதிகளவிலான மீத்தேன் உமிழ்வுகளை அடையாளம் காணும் ஒரு உயர் தொழில்நுட்ப அமைப்பு ஆனது கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசாங்கங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு 1,200 அறிவிப்புகளை வழங்கியுள்ளது.
- ஆனால் ஒரு சதவீத அறிவிப்புகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்பட்டது.
- வளிமண்டல மீத்தேன் ஆனது, கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) வாயுவிற்கு அடுத்தபடியாக பல்வேறு மனிதச் செயல்பாடுகள் காரணமாக ஏற்படும் புவி வெப்பமடைதலுக்கான இரண்டாவது பெரிய காரணியாகும்.
- இது $CO_2$ வாயுவினை விட 80 மடங்கு சக்தி வாய்ந்தது.
- புவி வெப்பமடைதலை 1.5 டிகிரி செல்சியஸ் என்ற வரம்பிற்குள் கட்டுப்படுத்தச் செய்வதற்கான செலவு குறைந்த பாதைகளை அடைவதற்கு, 2030 ஆம் ஆண்டிற்குள்

உலகளாவிய மீத்தேன் வெளியேற்றம் 40-45 சதவிகிதம் குறைக்கப்பட வேண்டும்.

## கிரினம் ஆண்ட்ரிகம்

- தாவரவியலாளர்கள் ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குத் தொடர்ச்சி மலையில் 'கிரினம் ஆண்ட்ரிகம்' எனப்படும் புதிய வகை பூக்கும் தாவர வகை ஒன்றைக் கண்டறிந்துளனர்.
- இந்த இனம் ஆனது, சப்பர்லா மலைகளின் வறண்ட, பாறைப் பாங்கான காடுகளில் வளர்கிறது.
- இந்தத் தாவரமானது க்ரினம் அமோனியம் மற்றும் க்ரினம் ஸ்ட்ராச்சி ஆகிய இரண்டு வகைகளுடன் நெருங்கிய தொடர்புடையது ஆனாலும் தன் சில முக்கிய அம்சங்களில் வேறுபடுகிறது.
- கிரினம் ஆண்ட்ரிகம் தாவரத்தின் பூக்கள் மெழுகு வெள்ளை நிறத்தில், ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் பூக்கக் கூடியது.
- இது இந்தியாவின் க்ரினம் இனங்களில் ஒன்றாக சமீபத்திய சேர்க்கப்பட்டதன் மூலம் அவற்றின் மொத்த எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது என்பதோடு இவற்றுள் பல இந்திய நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்டவை.



## புதிய நன்னீர் வாழ் மீன் வகை - கொய்மா

- ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று, மேற்குத் தொடர்ச்சி மலையில் கொய்மா எனப்படும் புதிய வகை நன்னீர் வாழ் மீன் இனத்தினைக் கண்டறிந்துள்ளனர்.
- நேமாசெய்லஸ் இனத்தின் கீழ் வருவதாக முன்னர் அடையாளம் காணப்பட்ட இரண்டு வகையான மீன்கள் தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட இந்த ஒரு இனத்தின் கீழ் மறு வகைப் படுத்தப் பட்டுள்ளன.
- மீசோனோமாசெய்லஸ் ரேமாதேவி மற்றும் நேமாசெய்லஸ் மோனிலிஸ் என்று பெயர் இடப் பட்ட அந்த மீன்கள் தற்போது கொய்மா ரேமாதேவி மற்றும் கொய்மா மோனிலிஸ் என மறுபெயரிடப் பட்டுள்ளன.

- இவ்விரு உயிர் இனங்களும் தற்போது மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப் படுகின்றன மற்றும் காவிரி ஆற்றின் கிளை நதிகளில் காணப்படுகின்றன.



# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய ஹாக்கி அமைப்பின் 100ஆம் ஆண்டு




- 99 ஆண்டுகளுக்கு முன்பு, 1925 அம் ஆண்டு நவம்பர் 07 ஆம் தேதியன்று குவாலியரில் ஹாக்கிக்கான முதல் தேசிய அமைப்பு உருவாக்கப்பட்டது.
- தற்போது இந்திய ஹாக்கி அமைப்பின் 100வது ஆண்டினை எட்டியுள்ள ஒரு நிலையில் இதற்கான ஓராண்டு காலக் கொண்டாட்டம் ஆனது ஹாக்கி இந்தியா அமைப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்திய அணி தொடர்ச்சியாக ஆறு ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.
- இன்று வரையிலும், மொத்தம் எட்டு ஹாக்கி ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள் என்ற இந்தியாவின் சாதனை இன்னும் முறியடிக்கப் படவில்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★